தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1993 அக்டோபர் 26, செவ்வாய்க்கிழமை.

ஐப்பசி 10, ஸ்ரீமுக— திருவள்ளுவர் ஆண்டு 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்''.

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லு தல் எவர்க்கும் எளியனவாம். சொல்லியபடி செய்து முடித்தல் தான் அரியனவாம்.

1. வினாக்கள்— விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 1, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு நிதியமைச்சர்.

I —

ஏக்கல்நத்தத்தில் வாக்குச்சாவடி.

* 20472— திரு. கே. முனிவெங்கடப்பன்:

மாண்புமிகு நிதிஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், கிருட்டினகிரி ஒன்றியம், நாரனப் பல்லி ஊராட்சி மலைமேல் உள்ள ஏக்கல்நத்தம் கிராம மக்கள் 7 கி.மீ. நடந்துவந்து நாரலப்பல்லியில் வாக்கு அளிக்க வேண்டி யிருப்பதால், அங்கேயே வாக்குச்சாவடி அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருந்து வந்தது. இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்ற பிறகு, பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற அந்த மாவட்டம், பொருளாதாரத்தில் முன்னேற வேண்டும், கல்வியில் முன்னேற வேண்டும் என்பதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரை, தனி கவனம் செலுத்தி இன்றைக்கு அந்த தர்மபுரி மாவட்டத்திற்கு பல தொழிற்சாலைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மேலாக பல கல்லூரிகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 51 ஆரம்ப பள்ளிகளைக் கொடுத்திருக்கிறார்கள். 6 உயர்நிலைப் பள்ளிகளைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி வாக்குச் சாவடி ஆரம்பிப்பது பற்றியது.

திரு. கே. முனிவெங்கடப்பன் : அந்த அளவிற்கு பல வகைகளில் கல்வி நிலையை வளர்ச்சியடையச் செய்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், மிகவும் பின் தங்கிய மாவட்டமாக இருக்கின்ற தர்மபுரியில், கிருட்டினகிரி தொகுதியிலே அந்த ஏக்கல்நத்தம் என்ற கிராமமானது, மலை மேலே இருக்கின்ற கிராமமாகும். அங்கேயிருந்து வாக்குச்சாவடிக்கு வர வேண்டுமென்றால், 7 கிலோ மீட்டர் நடந்து வர வேண்டும். சாதாரணமாக தள்ளாத வயதில் இருக்கின்ற பெரியோர்கள் அத்தனை தூரத்தைக் கடந்து வருவது என்பது சாதாரண காரியமல்ல. அதற்கு மேலாக அங்கே சாலை வசதி போடுவதற்கும் முடியாத அளவிற்கு மிகக் குறுகிய அளவிற்கு 'ஷார்ப்பாக' இருக்கின்ற ஒரு மலைப்பகுதியாகும். ஆகவே அங்கேயே வாக்குச் சாவடியை அமைத்தால் அங்கேயிருக்கின்ற வாக்காளப் பெருமக்களுக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே வருங்காலத்தில் அது பரிசீலிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதற்கும், அங்கே கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, மேம்பாட்டு வளர்ச்சிகளைச் செய்வதற்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. ஆனால் இந்த வினா கல்நத்தம் என்கின்ற ஊரிலே வாக்குச்சாவடி வைப்பதைப் பற்றி. ஏக்கல் நத்தம் என்ற ஊரிலே மொத்த வாக்காளர்கள் 348 பேர் தான் இருக்கிறார்கள். மேற்கொண்டும் அந்த ஊருக்குச் செல்வதற்குப் போதுமான வசதிகள் இல்லை. வசதி இல்லை

1993 அக்டோபர் 26]

என்பது மட்டுமல்லாமல், ஜீப் போன்ற கார்கள் எல்லாம் அங்கே செல்வதற்கு வசதிகள் இல்லை. அப்படியே சென்றாலும்கூட, அங்கே அரசாங்கக் கட்டிடம் என்ற வகையில் சாவடி வைப்பதற்கு ஒரு இடமும் அங்கேயில்லை. ஆக இப்படிப்பட்ட காரணங்களினாலே பஸ்ஸிலே போவது என்றாலும், பக்கத்திலே இருக்கின்ற ஒரு கிராமத்திலே போய் இறங்கி, 4 கிலோ மீட்டர் நடக்க வேண்டும். ஆனாலும்கூட, அந்த இடத்திலே வைக்கவேண்டுமென்று சொன்னால், இந்த வசதிகள் எல்லாம் வந்தால்தான் செய்ய முடியும். அதற்கான சாலை வசதிகள் போன்றவைகளைச் செய்வதற்கான முயற்சிகளிலே ஈடுபடலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு, சாலை வசதி இருந்து, போக்குவரத்து சரியாக ஆனாலும்கூட, அங்கே கட்டிட வசதி மற்றவைகள் எல்லாம் ஏற்படுதல் வேண்டும். அப்படியே ஏற்பட்டு, அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகினாலும், தேர்தல் ஆணையம் தேர்தல் சாவடிகள் வைப்பது குறித்து, என்ன வழிமுறைகள் கூறுகின்றது என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அது வந்ததற்குப் பிறகு இந்தச் சாவடிகள் எல்லாம் அமைப்பதற்கான முறைகள் மேற்கொள்ளப்படும். அப்படியே ஏக்கல் நத்தத்தில் ஒரு சாவடி வைக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டாலும், தேர்தல் ஆணையத்தினுடைய அனுமதி பெற்றுத்தான் வைக்க வேண்டி வரும். அதற்கான முயற்சிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இந்த அடிப்படை வசதிகளை எல்லாம் செய்து தருகின்ற சூழ்நிலையும் ஏற்பட வேண்டும். குறைந்தது ஒரு சாவடிக்கு 700 வாக்காளர்களாவது இருக்க வேண்டுமென்று இப்போது தேர்தல் ஆணையம் விதிமுறைகள் வைத்திருக்கிறது. வருங்காலத்திலே என்ன வழிமுறைகள் தருகின்றது என்பதைப் பொறுத்து, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2—

திருச்சி, கோயமுத்தூர், மதுரை நகரங்களுக்கு மக்கள் நீதிமன்றத்தை Lok adalat விரிவுபடுத்துதல்.

* 17493—திருமதி. கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சிறு விபத்துக்களில் பாதிக்கப்படுவோருக்கு நஷ்டஈடு அளிப்பதற்கான பிரச்சினைகளில் நீதிமன்றத்திற்குச் செல்லாமல் அதற்குமுன்பே தீர்வு காணும் மக்கள் நீதிமன்றம் (Lok adalat திருச்சி, கோவை, மதுரை உள்ளிட்ட பிற நகரங்களுக்கும் விரிவு படுத்தப்படுமா?

TRUTH ALONE TRIUMPHS